பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 10 வியாழக்கிழமை (26-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 227

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-2127)

## பொருளாதாரம் வங்குரோத்தில்

# யுத்த விமானங்களை வாங்குவதில் அரசுக்குப் பெருந் திண்டாட்டம்

## வரிச்சுமை அதிகரிக்கும் அபாயம்

(நமது நிருபர்)

**விடுதலைப் புலிகளினால் விமானப்படைத் தளம் தாக்கி அழிக்கப் பட்டதை அடுத்து, விமானப்படைக்குப் புதிதாக யுத்த விமானங்களையும், எம். ஐ 24, 17 ரக உலங்கு வானூர்திகளையும் கொள்வனவு செய்வதற்கு பாரிய நிதி நெருக்கடியை அரசு எதிர் கொண்டுள்ளது. யுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்துடன செய்து கொண்ட ஒப்பந்தம் தடையாக இருப்பதினால் மக்களின் வரிப் பணத்தில இருந்தே யுத்தத் தளபாடங்களை கொள்வனவு செய்ய வேண்டிய இக்கட்டான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.**

இலங்கை அரசு அண்மையில சர்வதேச நாணயநிதியத்துடன் தொடர்பு கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் எத்தகைய யுத்ததளபாடங்களையும் இலங்கை அரசு புதிதாக கொள்வனவு செய்யக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே நிதி உதவியை வழங்க சர்வதேச நாணய நிதியம் இணங்கியுள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நாட்டின் பாதுகாப்பு

[8ம பக்கம் பார்க்க]

## இந்தியாவின் பிரபல கொள்ளைக்காரி பூலான்தேவி சுட்டுக்கொலை

(புதுடில்லி)

மக்களவை உறுப்பினரும் முன்னாள் பிரபல கொள்ளைக்காரியுமானபூலான்தேவி நேற்றுப் பிற்பகல் புதுடில்லியில உள்ள அவரது இல்லத்திற்கு அருகில்வைத்து முகமூடியணிந்த இனந்தெரியாத மூன்று துப்பாக்கி நபர்களினால சுட்டுக் கொல்லப்பட்டார். இதன்போது மெய்ப் பாதுகாவலர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை மக்களவைக் கூட்டத்தில்கலந்து விட்டு வீடு திரும்பும போதே பூலான் தேவி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மாருதி காரில்வந்த முகமூடி அணிந்த மூவர் பூலான்

[8ஆம் பக்கம் பார்க்க]

## 7 சோடி சப்பாத்து கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்திற்கு அருகாமையில் உள்ள குன் றாஜ் என்னும் இடத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் இளைஞர்கள் அணியக்கூடிய 7சோடிசப் பாத்துக்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

# உல்லாசப் பயணிகள் இலங்கை செல்வதை தவிர்க்க வேண்டும்!

## அமெரிக்கா, பிரித்தானியா ஆலோசனை

[லண்டன்]

அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள்தமதுநாட்டுப் பிரஜைகளை, உல்லாசப் பயணமாகவோ அல்லது தனிப்பட்ட விஜயமாகவோ இலங்கைக்கு செல்லவேண்டாமென அறிவித்துள்ளது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய இராணுவ விமானத்தளம் மீது, விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து, இலங்கையில் தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பு இல்லை என்பதால் அங்கு செல்ல வேண்டாமென அந்நாட்டு பிரஜைகளுக்கு அமெரிக்க பிரித்தானிய நாட்டு இராஜாங்க அமைச்சர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சு நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில்:- இலங்கைக்கு உல்லாசப்பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகள மறு அறிவித்தல் வரை அங்கு செல்லவேண்டாம், எனக்கேட்கப்பட்டுள்ளதுடன், பாதுகாப்புநோக்கம கருதி இலங்கைக்கான சுற்றுலாப்பயணங்களை தவிர்க்குமாறும், நடைபெற்ற

[8ஆம் பக்கம பார்க்க]

## கட்டுநாயக்காவிமானசேவை மீண்டும் வழமைக்கு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் விமான சேவை நேற்று பிற்பகல் 5 மணியளவில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

முதலாவது இன்டியன் எயர்லைன்ஸ் விமானம் நேற்று பிற்பகல் சென்னையிலிருந்துபுறப்பட்டு 5மணிக்கு கட்டுநாயக்காவை வந்தடைந்துள்ளது.

இன்றிலிருந்து விமான சேவை வழமைக்குத்திரும்புமென்றும் விமானப்போக்குவரத்து அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

(வவுனியா)

வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாடுபூராவும தமிழ்ப்பெண் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைக் கண்டித்து நாளைமறுதினம் 28ம் திகதி வவுனியாவில் தமிழ்க் கட்சிகளினால் நடத்தப்பட விருந்த உண்ணாவிரதப் போராட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக 11 தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதி யொருவர் வலம்புரிக்கு தெரிவித்துள்ளார். (ம)

## புலிகள் முன்னணியில் சிஹலஉறுமய கருத்து

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகள் இப்போது முன்னணிக்குவந்து கொண்டிருக்கிறார்கள இந் நிலையிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி தனது பிரதான எதிரியாக ஐக்கியதேசியக் கட்சியையும் ஐக்கியதேசியக் கட்சி தனது பிரதானஎதிரியாக பொதுஜனஐக்கியமுன்னணியையும கருதுவது பரிதாபத்திற்குரியது.

இவ்வாறு சிஹலஉறுமய நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கட்சியின் ஊடகசெயலாளர் உதயகம்மன்விலவினால் வெளியிடப்பட்ட அவ்வறிக்கையில் ஜனாதிபதி அபிப்பிராய வாக்கெடுப்பைரத்துச் செய்துவிட்டு பாராளுமன்றத்தை உடனடியாகக்கூட்ட வேண்டுமென்றும் கேட்கப் பட்டுள்ளது. (இ)

## பருத்தித்துறை கடலில் ஒருமீனவரைகாணவில்லை

(யாழ்ப்பாணம்)

பருத்திதுறைக்கடலில் மீன் பிடிப்பதற்கு நேற்று அதிகாலை படகில்சென்ற மூவரில் ஒருவரைக் காணவில்லை எனவும மற்றைய இருவரும் கரை சேர்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுஅதி காலைபருத்தித் துறைக்கடலில் மீன்பிடிக்கச் சென்றவர்களது படகுகடற் படையினது படகுஒன்றுடன் மோதியதாகவும் அதனை அடுத்தே ஒருவரைகாணவில்லைஎனவும் பருத்தித்துறை ஈ.பி.டி.பி.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் காங்கே

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தேடுவதில் விமானப் படையினர்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது தாக்குதல் மேற்கொண்ட பின்னர் தப்பிச் சென்ற புலிகளை குரண, நீர் கொழும்பு பகுதிகளில் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து அப் பகுதியில் ஆரம்பிக்கப் பட்ட விமானப் படையின் தேடுதல் நடவடிக்கை தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேடுதல் நடவடிக்கையின் போது இதுவரை எவரும் அகப்படவில்லை என விமா

[8ஆம் பக்கம் பார்க்க]

# போர்க்களமாக காட்சி தந்த கட்டுநாயக்கா விமான நிலையம்

## "ஹரிகு" ஆசிரியர் வர்ணிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத் தளத்தில் நேற்றுமுன் தினம் இடம் பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவத்தினால் விமான நிலையம் போர்க்களமாக காட்சி அழித்தது போல இருந்ததுஎன்று மாலைதீவில் இருந்து வெளிவரும் 'ஹரிகு' செய்திப் பத்திரிகை ஆசிரியர் ரபீக் வர்ணித்துள்ளார்:

பாங்கொக்கில் இருந்து இலங்கை வாழியாக மாலை

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**
3K W டீசல் ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு
தொடர்பு: 21. சீனியர் லேன், ஆசடி வீதி, யாழ்ப்பாணம். T P. 2501
[C/2312]


## மழையின் பாதிப்பு அதிகரிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 200ற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

தொடர் மழையால் பாகிஸ்தானின் வடக்குப்பகுதியில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளதென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-7)

## முன்பள்ளிச் சிறுவர்கள் விபரம சேகரிப்பு

[புலோலி]

பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிச் சிறுவர்களில் பிறப்பு பதியப்படாமல் இருப்பவர்களுக்குப் பிறப்புகளைப் பதிந்து அவர்களுக்குப் பிறப்புச் சாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய இப்பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளில் பிறப்புப் பதியாமல் உள்ள சிறுவர்களின் விபரங்களைச் சிறுவர் பாதுகாப்பு நிதியம் திரட்டி வருகின்றது.

முன்பள்ளிகளில் பிறப்பு பதியப்படாமல் இருக்கும் சிறுவர்கள் பற்றிய விபரங்களை பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியர்சங்க ஆலோசகரிடம் இருவாரங்களுக்குள் ஒப்படைக்குமாறு சிறுவர் உரிமைகள் மாவட்டப்யிற்சியாளர் ஆ. குகதாஸ் அறிவித்துள்ளார். [உ-52]

## அதிபர் அறிவிப்பு

(நீர்வேலி)

யாழ். குட்டியப்புலம் அ. த. க. பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்று இடம் பெயர்ந்து தற்போது வேறுபாடசாலைகளில் கல்வி கற்கும் க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் செ. கந்தசாமி கேட்டுள்ளார். (உ-5)

## மரண விசாரணை

(புலோலி)

இளாலி முன்னரங்க நிலைகளில் இருந்து புலிகளின் பகுதிக்கு வேவு பார்க்கச் சென்ற சமயம் பொறி வெடியில் சிக்கி பலியான சாதாரண சிப்பாயான மஹியங்கனையைச் சேர்ந்த ஏரத்முதியான்செலாகே விஜய சிங்க (வயது 30) என்பவரின் மரண விசாரணை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ. பிறேம்சங்கர் முன்னிலையில் இடம்பெற்றது.

விசாரணையின் முடிவில் பொறி வெடியில் அகப்பட்டதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த படையினர் இருவர் பலாலி இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-52)

# ஐ. பி. சி. செய்தியாளர் தாக்கப்பட்டமைக்கு யா. மாநகரசபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஐ. பி. சி. செய்தியாளர் வே. தவச்செல்வன் மிருசுவில் படுகொலை சந்தேக நபரினால் தாக்கப்பட்டமை தொடர்பாக யாழ். மாநகர சபை நேற்று முன்தினம் கூடிய போது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது ஒரு மனித உரிமை மீறலெனவும், இச் செயலைக் கண்டித்து மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச மன்னிப்புச் சபை, சாவகச்சேரி நீதிமன்று, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கு அறிக்கை அனுப்புவதெனவும் மேற்படி மாநகரசபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-10)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

**சங்கானை**

| | |
|---|---|
| 197519 ஏ | 187519 பி |
| 183136 ஏ | 183136 பி |
| 187126 ஏ | 187126 பி |
| 191782 ஏ | 192211 ஏ |
| 192359 ஏ | 192359 பி |
| 192359 சி | 194254 ஏ |
| 194391 ஏ | 194391 பி |
| 194391 சி | 194845 ஏ |
| 194845 பி | 194849 ஏ |
| 194849 பி | 194842 ஏ |
| 194852 பி | 194852 சி |
| 194927 ஏ | 194927 பி |
| 194947 ஏ | 195007 ஏ |
| 195135 ஏ | 195802 ஏ |
| 195841 ஏ | 195858 ஏ |
| 195915 ஏ | 195916 ஏ |
| 195930 ஏ | 195930 பி |
| 196634 ஏ | 196634 பி |
| 196634 சி | 196090 ஏ |
| 196942 ஏ | 196964 ஏ |
| 197077 ஏ | 197077 பி |
| 197078 ஏ | 197079 ஏ |
| 197080 ஏ | 197090 ஏ |
| 197090 பி | 197111 ஏ |
| 197111 பி | 197141 ஏ |
| 197142 ஏ | 197142 பி |
| 197164 ஏ | 197164 பி |
| 197164 சி | 197194 ஏ |
| 197857 ஏ | 197857 பி |
| 197930 ஏ | 197939 ஏ |
| 197960 ஏ | 197962 ஏ |
| 198105 ஏ | 198119 ஏ |
| 198119 பி | 198811 ஏ. |
| 198899 ஏ | |

**சாவகச்சேரி**

| | |
|---|---|
| 187730 ஏ | 187730 பி |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 166987 ஏ | 166987 பி |
| 191649 ஏ | 198952 ஏ |
| 198972 ஏ | 198977 ஏ |
| 198977 பி | 199106 ஏ |
| 199161 ஏ | 199209 ஏ |
| 199209 பி | 199209 சி |
| 199232 ஏ | 199232 பி |
| 199242 ஏ | 199242 பி |
| 199245 ஏ | 199245 பி |
| 199250 ஏ | 200351 ஏ |
| 200375 ஏ | 200375 பி |
| 200393 ஏ | 200393 பி |
| 200393 சி | 200393 டி |
| 200426 ஏ | 201359 ஏ |
| 201378 ஏ | 201378 பி |
| 20 378 சி | 201422 ஏ |
| 203259 ஏ | 203261 ஏ |
| | 203261 பி |
| 203262 ஏ | 203262 பி |
| 203268 ஏ | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 187732 ஏ | 191364 ஏ |
| 196371 ஏ | 196371 பி |
| 196371 சி | 196371 டி |
| 199677 ஏ | 200470 ஏ |
| 200470 பி | 201206 ஏ |
| 201206 பி | 201206 சி |
| 201207 ஏ | 201209 ஏ |
| 201209 பி | 201210 ஏ |
| 201211 ஏ | 201213 ஏ |
| 201213 பி | 201213 சி |
| 201213 டி | 201214 ஏ |
| 201214 பி | 201214 சி |
| 201220 ஏ | 201220 பி |
| 201227 ஏ | 201230 ஏ |
| 201230 பி | 201230 சி |
| 201245 ஏ | 201301 ஏ |
| 201301 பி | 201433 ஏ |
| 201433 பி | 185158 ஏ |
| 185158 பி | 187200 ஏ |
| 190335 ஏ | 190453 ஏ |
| 194860 ஏ | 194860 பி |
| 194860 சி | 194932 ஏ |
| 194968 ஏ | 194976 ஏ |
| 194979 ஏ | 195086 ஏ |
| 195095 ஏ | 195095 பி |
| 195095 சி | 195095 டி |
| 195141 ஏ | 185933 ஏ |
| 195934 ஏ | 195966 ஏ |
| 195966 பி | 196921 ஏ |
| 196921 ஏ | 196971 ஏ |
| 196995 ஏ | 196995 பி |
| 196995 சி | 196995 பி |
| 197012 ஏ | 197030 ஏ |
| 197030 பி | 197152 ஏ |
| 197161 ஏ | 197161 பி |

(தொடரும்)

**புலிகளைத்** ...னப்படையின் பேச்சாளர்லிங் கொமாண்டர் அஜித்விஜய சேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று அப்பகுதியில் விமானப் படையின் தேடுதல் நடவடிக்கைகள் இடம் பெற்ற போதுதுப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகவும் இதன் போது கிராமவாசி ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது (ந-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலிருந்து
மணிவிழாக் காணும்
எங்கள் விஞ்ஞான ஆசிரியர்
திருமதி
தவளாம்பிகை சிவசுப்பிரமணியம்
அவர்களை
மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்!

அன்பினால எமைஅரவணைத்து அறிவூட்டிய
அறிவாலயமே
கல்வியென்பது கசந்திடாமல் கரும்பாகிய
கலைத் தெய்வமே
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய தாயே
பல்லாண்டு நீர் நலமுடனே வாழி வாழி

சிறப்புடன் வாழ வாழ்த்தும்.
திரு. பா. குமரேஸ்வரன் (பண்ணாகம்)
திரு. ச. சாரநாதன் (சித்தன்கேணி)
திரு பா. மதியழகன் (சுழிபுரம்)
பழைய மாணவர்கள்
யாழ்/பண்ணாகம் மெய்கண்டான்
மகாவித்தியாலயம்.

(3397)



# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

# VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 28–09–2001 for the undermentioned posts.

## FACULTY OF MEDICINE

SENIOR LECTURER GRADE I/SENIOR LECTURER GRADEII/LECTURER (PROBATIONARY) in Anatomy, Biochemistry, Community Medicine Forensic Medi–cine/Microbiology Obstetrics&Gynaecology/Paediatrics/Parasitology/Pathology/Phar–macology, Physiology, Psychiatry/Surgery.

## FACULTY OF SCIENCE

SENIOR LECTURER GRADE I/SENIOR LECTURER GRADEII/LECTURER (PROBATIONARY) in Botany Chemistry/Computer Science Physics/Mathematics & Statistics, Zoology.

## FACULTY OF ARTS

SENIOR LECTURER GRADE I/SENIOR LECTURER GRADEII/ LECTU–RER (PROBATIONARY) in Economics/English Literature Psychology.
LECTURER (PROBATIONARY in Physical Education
INSTRUCTRESS in Physical Education Grade III.

| Post | Salary Code | Salary Scale |
|---|---|---|
| Senior Lecturer Grade I | B–03 (a) | Rs 21,500– 8x475–25,300 p.m |
| Senior Lecturer Grade II | B–03 | Rs. 18,325– 5x475–20,700 p.m |
| Lecturer Probationary | B–04 | Rs. 11,820–10x375–15,570 p.m |
| Instructress in Physical Education | BS–04 | Rs. 8,715– 6x185– 9,825 p.m |

Note: Allowances will also paid as approved by the University Grants Commission.

Appointees will become contributors to the University's Provident Fund, contri–buting 10% of their earnings and the University contributing an amount equivalent to 7% of their monthly earnings. In addition they will become contributors to the Employees Trust Fund and the University Pension Scheme under which the Univer–sity will contribute an amount equivalent to 3% and 8% of the monthly earnings of the employee respectively.

The holders of posts of Senior Lecturer Grade I and Senior Lecturer Grade II are eligible for one year Sabbatical Leave with full pay or Two years without pay on completion of seven year service. Those proceeding abroad on Sabbatical Leave are eligible to receive full passage for self and spouse.

Application forms and other details may be obtained from the office of the SENIOR ASSISTANT REGISTRAR, ESTABLISHMENTS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA either in person or by sending a Money Order for Rs 20 – per from. Those who wish to obtain application forms by post are requested to send a money Order/Postal Order drawn in favour of the BURSAR, UNIVERSITY OF JAFFNA together with a self-addressed stamped envelope 23 x 10 cm in size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

[C–2313]

REGISTRAR
University of Jaffna, Sri Lanka.
24th JULY 2001

# கைதான கள்வர் வசமிருந்து

# திருட்டுப் பொருட்கள் மீட்பு

## ஆதாரம் காட்டிப் பெறுமாறு பொலிஸார் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கைதான திருடர்களிடம் இருந்து மீட்கப்பட்ட ஒரு தொகைப் பொருட்கள் யாழ் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும் உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

மின்பிறப்பாக்கி 2, நீர் இறைக்கும் இயந்திரம் -4, சைக்கிள்-7, மின்விசிறி-1, தொலைக்காட்சி-1, டெக்-1, மற்றும் நகைகள் என்பவையே திருடர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருட்களாகும்.

மேற்படி மீட்கப்பட்ட பொருட்களுடன் கைதுசெய்யப்பட்ட 4 திருடர்களிடம் பெற்ற வாக்கு மூலங்களின் அடிப்படையில் மேலும் பல திருடர்களைத் தேடி வருவதாகவும்.

இவர்கள் தொடர்பான தகவல்களை அறிந்தவர்கள் 2222 தொலைபேசி என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமக்கு அறியத்தருமாறும் பொலிஸார் மேலும் அறிவித்துள்ளனர்.

(உ-10)

# சமூக முன்னேற்றம் கருதி பணி புரிபவர்களுக்கு தலைமைத்துவக்கருத்தரங்கு

(ஈச்சமோட்டை)

கிராம மட்டத்தில் மனித முன்னேற்ற பணிகளில் ஈடுபட்டு வரும் குழுக்களிலுள்ள அங்கத்தவர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை கியூடெக் நிறுவன தலைமையகத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில், சமூக மட்டத்தில் மனித முன்னேற்றப் பணிகளில் எவ்வாறான தலைமைத்துவ பண்புகளுடன் ஈடுபட வேண்டும் என்பது பற்றிய ஆலோசனைகள் வழங்கப்படும் என்றும் இது முழு நாள் கருத்தரங்காக அமையும் என்றும் கியூடெக்கின் சமூக விழிப்புணர்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-59)

# பிறவுண் வீதியூடான பேருந்துச் சேவை நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியப் போக்குவரத்து சபையின் பிறவுண் வீதி ஊடான பேருந்துச் சேவை நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

தொழில் நுட்பப் பயிற்சி திணைக்கள உதவி பிராந்திய பணிப்பாளர் நடேசராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் நீதிமன்ற நீதிவான் இ.த விக்கினராஜா கலந்து கொண்டு 808 ஆம் இலக்கப் பேருந்துச் சேவையினை ஆரம்பித்து வைப்பார்.

தொழில் நுட்பக்கல்லூரிக்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடத்தினை வட பிராந்தியபோக்குவரத்து சபையின் பொது முகாமையாளர் மணிவாசகம் திறந்து வைக்கவுள்ளார்.

(உ-6)

# புலோலி, சாவகச்சேரி. கமக்காரர்களுக்கு நல்லின விதை நெல் விநியோகிக்க நடவடிக்கை

(புலோலி)

புலோலி கமநல சேவை நிலையப் பகுதி கமக்காரர்களுக்கும் சாவகச்சேரி கமநலச் சேவை நிலையப் பகுதி கமக்காரர்களுக்கும் நல்லின விதை நெல்வகைகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை புலோலி கமநலச் சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கே. கேசியச்சந்திரன் சாவகச்சேரி கமநலச் சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். சத்தியேந்திரா ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

இருகமநலச்சேவை நிலையப் பகுதிகளுக்குமான விதை நெல் வகைகள் புலோலி கமநலச் சேவை நிலையத்தில் வைத்து ஒரு புசல் 680 ரூபவாக வழங்கப்படவுள்ளன.

(உ-52)

# யாழ்ப்பாண வலய பாடசாலைகளுக்கு இலவச சீருடை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவசசீருடை இம் மாதம் 30,31 ஆம் திகதிகளிலும் வரும் மாதம் முதலாம் திகதி விநியோகிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைக்குமுரிய சீருடைப் பொதிகளை அவ்வப் பாடசாலை அதிபர்களே உரிய பாடசாலைக்குக் கொண்டு செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் எனவும்,

காலை 9.30 மணி முதல் 2.00 மணி வரையான நேரத்தில் இவை விநியோகிக்கப்படவுள்ளதால், யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளை 30ஆம் திகதி திங்கட்கிழமையும்.

நல்லூர் கோட்டப் பாடசாலைகளை 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும்,

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளை மறுதினம் புதன்கிழமையும் இலவச சீருடைகளைப்பெற்றுக் கொள்ளுமாறும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

[உ]

# சுற்றி வளைத்து தேடுதல்

(வடமராட்சி கிழக்கு)

யாழ். பல்கலைக்கழக பின் வீதிப் பகுதி நேற்று காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிரசோதனைக்கு உள்ளாக்கப்பட்டது.

வீடு வீடாக சென்ற படையினர் குடும்பப் பதிவு அட்டை மற்றும் அடையாள அட்டைகளையும் பரிசீலித்தனர்.

(உ-43)

# பதிவாளர் அலுவலகம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பகுதி செம்பியன்பற்றுப்பிரிவுபிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் அலுவலகம் மணற்காட்டுப் பகுதியில் இயங்கி வருகிறது.

[உ-43]

# இராசி பலன்

26-7-2001
(ஆடி 10, வியாழன்)
சஷ்டி ந.ப 12.11 வரை
அத்தம பி.ப 3.50 வரை
ராகுகாலம் 1.32-3.02
நல்லநேரம்-7.32-9.02
சித்தம், சஷ்டி விரதம்

**மேடம்**

வியாதி குணமடைதல், சந்தோசம், திடீர்பயணம், காரிய நன்மை.

**இடபம்**

குடும்பக்கவலை, காரிய இடையூறு, உடல் நலக்குறைவு, தொழில் முயற்சி.

**மிதுனம்**

பயந்த சுபாவம், தன்னம்பிக்கைக்குறைவு, முயற்சி தாமதம், கல்விச்சிறப்பு.

**கடகம்**

பிரயாணம், சகோதரர் உதவி, தனவரவு, காரிய நன்மை.

**சிங்கம்**

வாக்குகலகம், காரிய தாமதம், அவமானம், பொருள் விரயம்.

**கன்னி**

நன்மை விருத்தி, சௌரவம், ஆரோக்கியம், புதிய பொருள்சேர்க்கை.

**துலாம்**

மனக்கிலேசம், தந்தைவழி உறவு, காரியதாமதம், பிரயாணம்.

**விருச்சிகம்**

நல்வகாரியம், தனலாபம், கீர்த்தி, குடும்பமகிழ்ச்சி.

**தனுசு**

கடினஉழைப்பு, முயற்சி கைகூடும், தொழில்மேன்மை, அதிகாரம்.

**மகரம்**

கட்டுப்பாடு, மனப்பயம், புதிய திட்டமிடல், காரிய தாமதம்.

**கும்பம்**

மனக்குழப்பம், திடீர் நன்மை, பிரயாண தடங்கல், பிரயாணபயம்.

**மீனம்**

வாகன வசதி, நண்பர்கள் உதவி, தனவரவு, கௌரவம்.

-வளவன்-
(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

# நல்லூரான் திருவடிக்கு-2



## தமிழ்ப்பணிக்கே வை

உன்நாமம் நாவில் உரையாமல் உறங்காத
என்நாவை எப்போதும் ஏற்றிருப்பாய்-என்னானே
கண்ணானாய் கன்னித் தமிழ்ப்பணியே காலமெலாம்
முன்னாக என்னைநீ வை.

நயினைச் சோதி

## சுகந்தம் வீசும் வேல்

தேன் சொட்டும் பூவண்ண முகம்
திசை முட்டும் பாவண்ண அகம்
நான் பாடும் நல்லை முருகன்
நாளும் தேடும் நல்லை முருகன்

நிலா பெருகும் அருள் நகை
நீர் வடியும் பழனி மலை
விழா நாளில் வசந்தம் பேசும்
வேல் அழகில் சுகந்தம் வீசும்

புலேந்தி திலீப்காந்

## அருள் என்றும் புரிவாயப்பா

சித்தர்கள் வாழ்ந்த தேரடி நல்லூர் முருகா
சிரத்தையுடன் வணங்குகின்றோம் உன் திருவடியை
முத்திக்கு வித்தான முருகப் பெருமானே
மும்மலங்கள் நீங்கிடவே அருள்புரிவாயப்பா!

கண. ஜீவகாருண்யம்

## குலமே விளங்க அருளாயோ?

வடிவான வள்ளி மடமாது தெய்வி
யுடனோடு கொஞ்சும் அழகோடு
வரம்வார வென்று பணியாறும் நன்கு
ஒலிவார வெள்ளி மயிலேறி
வடிவேலொ டன்பர் குடியோடு பிள்ளை
மிடிபோக வுந்தன் அருள்தாராய்
கொடிமேலெ ழுந்து விடிவேக விந்து
குலமேவி ளங்க அருளாயோ?
டடியேறி வந்து துயர்கூறி நொந்து
பணிவோரின் துன்பம் துடைவேலா
பதநாளும் கண்டு பணியாத வென்னை
பதம்பாடு வென்று பணியாயோ?
அடிநாளில் செய்த பிழையோடி யுந்தன்
அடிபோற்று வண்மை யருள்வேலா
அடியாரின் நெஞ்சில் குடியேறி யென்றும்
அருள்வாரும நல்லை யிறையோனே!

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

## [illegible]லறு நல்லூரானே

தி[illegible] சிவன் [illegible]
[illegible] கையோனின் இளையோனே
[illegible] சிவனுக்கு உபதேசித்த சிவசக்தி
தண்டாயுதபாணி முருக வேலவனே
தில்லைத் தகப்பன் சாமியி[illegible] [illegible]மும் நீ
தாமென மயிலேறி வந்த குமரனே
தில்லைச் சிவாலயம் ஐந்துடைய இலங்கையிலே
தொல்லை தீர்க்கும நல்லூர்க் கந்தனே!

விநாயகசிவம்

# உடுவில் கரவெட்டி கால்நடை வைத்திய நிலைய பணிகள் திருப்தியில்லை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட உடுவில் கால் நடை வைத்திய நிலையம், கரவெட்டி கால் நடை வைத்திய நிலையம் ஆகியவற்றுக்கு கால் நடை வைத்திய சேவையினைச் செய்வதற்கு நிரந்தரமான வைத்தியர்களும், கால் நடை வைத்திய போதனாசிரியர்களும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கால் நடைப் பண்ணையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்விரு புதிய கால் நடை வைத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நிறைவான சேவையினை வழங்க முடியவில்லை என்று குறிப்பிடப்படுகின்றது.

இந் நிலையங்களிற்கான வைத்திய சேவையினை பருத்தித்துறை, தெல்லிப்பழை ஆகிய நிலையங்களில் வைத்தியர்கள் செய்து வருகின்றனர்.

இவ்வகையில் நிலவிவரும் வெற்றிடங்களை நிவர்த்தி செய்யுமாறு திருக்கோணமலையில் அமைந்துள்ள மாகாணதிணைக்களப் பணிப்பாளரிடம் யாழ். கால்நடை வைத்திய அதிகாரி எம். தங்கராஜா வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(உ-6)

## செய்தித் துளிகள்

### தொண்டர் ஆசிரியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களாகத் தற்போது கடமையாற்றுபவர்கள் அண்மையில் நடந்து முடிந்த நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளத் தவறியிருப்பின் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு சம்பந்தப்பட்ட வலயப் பணிமனைகளில் இடம்பெறும் நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப்பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [உ]

### கலை 'நிலா அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலா மன்றத்தால் நடத்தப்படும் ''கலை நிலா அரங்கு'' இம்மாத நிகழ்வுகள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 க்கு மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

வாத்திய இசை, நடனம், வாய்ப்பாட்டு, அசைந்தன் ஆட்டம் மற்றும் விசேட நிகழ்வாக விடலைக் குமுறல் நாடகம் ஆகியன அன்று இடம் பெறவுள்ளன. (உ-104)

### ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணம்

(செம்பியன்பற்று)

மருதங்கேணிக் கோட்ட ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த ஞாயிறன்று புலோலி ம. வி. தமிழ் பாடசாலையில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவராக ஸ்ரீஸ்கந்தராசா, செயலாளராக திரவியராசா, பொருளாளராக செல்வி தில்லையம்மா மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக சிவசுப்பிரமணியம், வாசுகி, பரமேஸ்வரன், அம்பலவாணர், சத்தியபாமா, அம்பிக்குமார், விஜயகுமார் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (உ-42)

### பொலிஸ் மீது துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஓட்டமாவடிப் பகுதியில் பொலிஸார் ஒருவர் விடுதலைப்புலிகளின் பிஸ்டல் குழுவின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

அண்மையில் மேற்படி பொலிஸார் கடையில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த சமயம் சுடப்பட்டதாகவும் இவர் தற்பொழுது பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-5)

### தாக்குதலுக்கு ஐ. தே. கட்சியே காரணம்

(கொழும்பு)

நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தளத்தில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலுக்கு ஐ.தே. கட்சியினரே காரணம் என அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகள் கொழும்பிற்குள் ஊடுருவுவதற்கு ஐ. தே. கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளுமே காரணமாகும் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (செ)

### ஞானச்சுடர் மாத வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவப் பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' ஆவணி மாத இதழ் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை மு. ப 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நூலிற்கான வெளியீட்டுரையை சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகரும், மதிப்புரையை யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயரும் நிகழ்த்தவுள்ளார்கள். (செ)

### மண்ணெய் குடித்த குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

தவறுதலாக மண்ணெண்ணெய்யைக் குடித்த குழந்தை நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமாகியது.

அச்சுவேலி நாவற்காட்டைச் சேர்ந்த கணேசுவரன் சுகந்தினி (வயது 2) குழந்தையே பரிதாபமாக மரணமானது. (உ-104)

### ச. கல்வி பொது அறிவு போட்டி

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட சமூகக் கல்விப் பாட பொது அறிவுப்போட்டி இன்று பி.ப 2.30 மணிக்கு வட இந்துமகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா அறிவித்துள்ளார். [உ-23]

### முட்டை விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் முட்டை விலை வீழ்ச்சியடைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

நல்லைக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளமை உட்பட குடாநாட்டின் பல இடங்களிலும் ஆலய திருவிழாக்கள் ஆரம்பமாகியிருப்பதையடுத்தே இந் நிலை ஏற்பட்டுள்ளது: கடந்த மாத நடுப்பகுதியில் ரூபா 8 முதல் 11 வரை விற்பனை செய்யப்பட்ட முட்டை, இப்போது ரூபா 5 முதல் 7 வரை விற்கப்படுகிறது.

அத்துடன் இறைச்சிக் கோழிகளின் விலையும் குறைவடைந்துள்ளது. (உ-124)

### படையினர் கண்காணிப்பு

(ஈச்சமோட்டை)

சுண்டுக்குளிப்பகுதி நேற்றைய தினம் படையினரின் தீவிர கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்பட்டது.

காலை முதல் மதியம் வரை இப்பகுதியிலுள்ள குச்சொழுங்கைகள் வீதிகள் தோறும் அதிக எண்ணிக்கையான இராணுவத்தினர் கண்காணிப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அத்துடன் இடையிடையே வீதியில் செல்லும் மக்கள் தடுக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

## பரு. அரசினர் ஆதார வைத்தியசாலை மன நோயாளர் சிகிச்சைப்பிரிவில் தொழில்வழி சிகிச்சை ஆரம்பம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை மன நோயாளர் சிகிச்சைப் பிரிவில் தொழில் வழி சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பல்வேறு உளவியல் தாக்கங்களினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் நோயிலிருந்து விடுபடவும், நோயில் இருந்து விடுபட்டதும் எதிர்காலத்தில் சுயமாக தொழில்களில் ஈடுபடுத்தும் நோக்குடனும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் தொழில் வழி சிகிச்சையில் பன்னவேலை, அலங்கார பூவேலைகள், வாத்திய கருவிகள் இயக்குதல் போன்ற பல்வேறு பயிற்சி நெறிகள் அடங்குகின்றன.

இவர்களுக்கு விவசாய தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகளை வழங்க அரசசார்பற்ற நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும்,

இப்பயிற்சி நெறியில் தற்போது 15 இற்கு மேற்பட்ட மனநோயாளர்கள பங்கு கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதற்கான ஏற்பாடுகளை உளநலத்துறை வைத்திய நிபுணர் தயா சோமசுந்தரம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

### நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கலாநிதி பிரம்ம ஸ்ரீ கா. கைலாசநாத குருக்களின் நினைவு தின நிகழ்வுகள் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் பேராசிரியர் கலாநிதி பிரம்ம ஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

### போட்டிகளில் வெற்றி

(உடுவில்)

கோட்டமட்டத்தில் நடைபெற்ற சமூககலைக் கண்காட்சிப்போட்டியில் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் எட்டு இடங்களையும் பொது அறிவுப்போட்டியில் ஒருஇடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளது.

அத்துடன், 6 இடங்களில் வலயமட்டத்தில் போட்டியிட தகுதிபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-129)

### விஷமிகளால் சிரமம்

(துன்னாலை)

கரவெட்டி சோளப்புலில் அமைந்துள்ள இந்து மயானத்திற்குச் செல்லும் வீதியில் விஷமிகள் சிலர் கண்ணாடிப் போத்தல்களை உடைத்து அதன் உடைந்த துண்டுகளை பரவியுள்ளதாகவும்,

இதனால் அவ் வீதியால் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதாகவும் கூறப்படுகிறது. (உ-4)

### சுகாதார குழு தலைவராக மங்களநேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் சுகாதாரக் குழுத் தலைவராக ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மாநகரசபை உறுப்பினர் மனுவல் மங்களநேசன் பதவி ஏற்றுள்ளார்.

சுகாதாரக் குழுத் தலைவராக பதவிவகித்த செல்லையா விஜயரத்தினம் பதவி விலகியதையடுத்தே சுகாதாரக் குழுத்தலைவராக மங்களநேசன் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-10)

### நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டம் கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் சபையோரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் என். சிவகடாட்சம், செயலாளர் எவ். எக்ஸ். சில்வெஸ்ரர், பொருளாளர் வி. சுப்பிரமணியம் அத்துடன், 15 பேரடங்கிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்

2002 ஆம் ஆண்டு கல்லூரியின் 150 ஆவது ஆண்டுவிழா கொண்டாடுவதென்றும் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. (உ)

## கணவனை இழந்த சோகம் குழந்தைகளுக்கு நஞ்சூட்டி தானும் நஞ்சுண்ட தாய் கனடாவில் சம்பவம்

(கொழும்பு)

கனடாவில் ரொறன்ரோ நகரில் வசித்து வரும் இலங்கைப் பெண்ணொருத்தி தானும் நஞ்சருந்தி தன் இரு குழந்தைகளுக்கும் நஞ்சுபருக்கியதில் குழந்தைகள் இரண்டும் இறந்துபோயுள்ளன.

அயலவரின் முயற்சியால் அப்பெண் காப்பாற்றப்பட்டுள்ளார்.

யசோ [வயது 32] என்பவரே தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளார்.

சியாமினி [வயது 5] சஞ்ஜீவ (வயது 3) ஆகியோர் நஞ்சு பருக்கியதால் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி பெண்ணின் கணவரான மகேந்திரன் தியாகராஜா [வயது 42] என்பவர் கனடாவில் தொழில் புரிந்த இடத்தில் ஏற்பட்ட விபத்தில் காலமானதைத் தொடர்ந்து விரக்தியடைந்த நிலையில் இவ்வாறு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும்.

தனதும் குழந்தைகளினதும் மரணத்திற்கு எவரும் பொறுப்பாளியல்ல என எழுதிவைக்கப்பட்ட கடிதம் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது (உ)

## தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட செய்திக்கு ம.வி.மு. மறுப்பு

(கொழும்பு)

கருத்துக் கணிப்புவாக்கெடுப்பு தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி நடுநிலை வகிப்பதாக தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட செய்தியை அக்கட்சி வன்மையாக மறுத்துள்ளது.

இதுதொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி வெளியிட்ட அறிக்கையில், கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பிற்கு எதிராக தமது கட்சி செயற்படும் என்பதை கடந்த 16 ஆம் திகதியே தாம்தெளிவுபடுத்தி விட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ]

## நல்லாட்சிஎன்னும்தலைப்பில் மூத்த நிர்வாகிகளுக்கு இன்று கருத்தரங்கு

[திருகோணமலை]

வடகிழக்கு மாகாணசபையின் மூகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களம் ''நல்லாட்சி'' என்னும் தலைப்பில், இலங்கை உள்ளூராட்சி நிறுவகம், தென்னாசிய இலங்கைக் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து மூத்த நிர்வாகிகளுக்காக உப்புவெளி மாநகரசபை விருந்தினர் விடுதி மாநாட்டு மண்டபத்தில் இன்று கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது.

இக் கருத்தரங்கில் பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி அரசாங்கத்திலிருந்து நல்லாட்சி என்னும் தலைப்பிலும், நிதி ஆணைக்குழுவின் தலைவர் அசோகா குணவர்த்தனா அதிகாரப்பகிர்வு பன்முகப்பாடு ஆகியவை ஊடாக நல்லாட்சியை நிறுவுதல் என்னும் விடயம் பற்றியும் தென்னாசிய இலங்கைக் கூட்டமைப்பு நிறுவனப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பத்மா இரத்நாயக்கா ஜனநாயகத்தின் கருத்துருவம் நல்லாட்சியில்; அரசாங்கம் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்கு என்னும் விடயம் பற்றியும் சிறப்புரையாற்றவுள்ளனர். [உ]

### 26 வது நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

மறைந்த முன்னாள் யாழ். நகர மேயரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான அல்பிரட் தங்கராசா துரையப்பாவின் 26 வது நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன. (உ)

### கருத்தரங்கு

[வடமராட்சி கிழக்கு]

வடமராட்சி கிழக்கு பகுதியிலும் மிதி வெடி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

குடத்தனை தென் இந்திய திருச்சபையில் இறுதியாக இக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. [உ-43]

## இன்று ஒரு தகவல்

# வலித்தால் வலிமை உண்டு

பெரியவர்களுக்கு அதிக மதிப்புத் தரும் நாடு ஒன்று இருந்தது அந் நாட்டில் ஓர் ஊரில் நாற்பது வயதுடைய ஒருவர் இருந்தார் அவர் முன்கோபி அவருக்கு ஒரேயொரு மகன் இருந்தான். அவர் தன் மகன் சிறு தவறு செய்தாலும் அவனைப் போட்டு அடி அடியென்று அடித்து வந்தார். மகன் வளர்ந்து பெரியவனாகி அவனுக்குத் திருமணமானபின்னரும் தன் நிலையை அவர் மாற்றிக் கொள்ளவில்லை. ஒருமாதத்திற்கு இரண்டு முறையாவது தவறாமல் மகனுக்குப் பூசை கிடைத்து வந்தது தந்தை அடிக்கும் பொழுது சிறிது கூட எதிர்ப்பைக் காட்டாமல் அவற்றை வாங்கிக் கொள்வான் அதற்காகச் சிறிதும் கண் கலங்க மாட்டான்.

இப்படியே பல ஆண்டுகள் சென்றன. ஒருநாள் வழக்கம் போல மகனை அடித்து விட்டு ஓய்ந்தார் தந்தை. ஆனால், மகன் [illegible] போல் தாங்கிக் கொள்ளாமல் முதன் முறையாகத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான் இதனைக் கண்ட தந்தையாரின் மனம் இளகிவிட்டது. "நன்றாக அடித்து விட்டேனா? அதிகம் வலிக்கிறதா?" என்று அன்பாகக் கேட்டார். அதற்கு மகன் "இதற்கு முன்னர் நீங்கள் அடிக்கும் போதெல்லாம் எனக்கு வலிக்கும் என் தந்தையார் வலிமையோடு இருக்கிறார் என்ற மகிழ்ச்சியில் திளைப்பேன்" ஆனால் இன்று நீங்கள் அடிக்கும் போது எனக்குச் சிறிது கூட வலிக்கவில்லை ஐயோ! என் தந்தையின் வலிமை குறைந்து விட்டதே! முதுமை அடைந்து விட்டாரே! இனி என்ன செய்வேன் என்று நினைத்தேன் என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொல்லிவிட்டுத் தேம்பினான் தன் மீது மகனுக்கு இருக்கும் அன்பை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியுடன் அவனைத் தழுவிக் கொண்டார் தந்தை. □

**பேராசிரியர் எ சோதி**

## கொலை, கொள்ளை ஆட்கடத்தல்

# குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சிறைக்கைதிகள் மூவர் தப்பியோட்டம்

## திகாகொடவில் சம்பவம்

(கொழும்பு)

திக்வலையிலுள்ள இரத்தினக்கல் வியாபாரியொருவரின் மகனைக் கடத்தப் போவதாக கூறி 60 இலட்சம் ரூபாவை பணயமாகப்பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த அறுவரில் மூன்று பேர் கடந்த ஞாயிறன்று அதிகாலை வேளை திகாகொட பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பியோடியுள்ளனர்.

அண்மையில், ஜா-எல என்னுமிடத்தில்வைத்துகைது செய்யப்பட்ட மூவரும் இராணுவத்தை விட்டோடியவர்கள் என்று திகாகொட பொலிஸ் பொறுப்பதிகாரி கல்தேரா தெரிவித்தார்.

இவர்கள் பத்திற்கும் மேற்பட்ட கொலைகளையும், 20 இற்கும் மேற்பட்ட கொள்ளைகளையும் புரிந்தவர்கள் என்றும் சிறையின் இரும்புச் சட்டங்களை அரிந்து அதனூடாகவே தப்பிச்சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்நேரம் அங்கு கடமையிலிருந்த நான்கு பொலிஸாரும் தற்பொழுது பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். (உ)

## வருடாந்த உற்சவம்

(உடுவில்)

அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர் வரும் 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 3 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

மஹோற்சவ காலங்களில் 'பெரியபுராணம்' என்னும் தலைப்பில் மகாஜனாக் கல்லூரி உபஅதிபர் செ இராஜகுலேந்திரன் சொற்பொழிவாற்றிவருகிறார். (செ-129)

# 12 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(சுண்டுக்குளி)

யாழ் வலயப் பாடசாலைகளும் உதைப்பந் தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் 12 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் விளையாடவுள்ள பாடசாலைகளின் விபரம் வருமாறு:

பி.ப 3.00 மணிக்கு உரும்பிராய் றோ.க. பாடசாலையை எதிர்த்து ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியும், பி.ப. 3. 40 மணிக்கு புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணுவித்தியாலயத்தை எதிர்த்து இடைக்காடு மகா வித்தியாலயமும் பி.ப. 4 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை எதிர்த்து ஊரெழு கணேச வித்தியாலயமும் மோதவுள்ளன. (செ-110)

# சர்வஜன வாக்கெடுப்பு 17 கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை ஆதரிப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணி உட்பட 16 அரசியல் கட்சிகளும்,

எதிர்ப்பதாக 17 அரசியல் கட்சிகளும் தமக்குத் தெரிவித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, 13, அரசியல் கட்சிகள் இன்னமும் தமது நிலைப்பாட்டினைத் தெரிவிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

# மாணவர்களின் வைப்பு தொகை அதிகரிப்பு

(மந்திகை)

79 வது அனைத்துலக கூட்டுறவுத்தினத்தையொட்டி கடலட்டேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால், சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் தரம்-5 புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்க்கு வைப்புச் செய்யப்பட்ட தொகையை மேலும் அதிகரித்துள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

கடந்த 99 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 60 இற்கும் மேற்பட்ட மாணவர் இத்திட்டத்தில் இணைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-23)

## பரு. சுகாதார

# வைத்திய அதிகாரி பிரிவில் தொற்று நோய்த்தடுப்பு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தொற்றுநோய்த் தாக்கம் அதிகமாகவுள்ள பகுதிகளில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

அண்மைக் காலமாக கொடிக்காடு இடம்பெயர்ந்தோர் முகாம் மற்றும் கரணவாய், நவிண்டில் பகுதிகளில் காய்ச்சல், மற்றும் வயிற்றோட்ட நோய்களின் தாக்கம் அதிகரித்திருந்தது.

இதனை அடுத்து இப்பகுதியிலுள்ள பொதுக்கிணறுகள் சுத்தமிடப்படுவதுடன் தொற்றுநோய்கள் தொடர்பான வீடியோ படக்காட்சிகள் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகிறது.

இப்பணியில் பிரதேச சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதார தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். (உ-23)

## வருடாந்த உற்சவம்

(மந்திகை)

வதிரி காளையந் தோட்டம் ஸ்ரீ முத்துக் குமாரசாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர் வரும் 3-ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 4-ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. [செ-23]

## மாணவர்க்கு அழைப்பு

[துன்னாலை]

யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் கல்வி கற்று தற்போது வேறுபாடசாலைகளில் கற்கும் தரம் 11 மாணவர்களை உடன் தொடர்பு கொண்டு விபரங்களைத் தந்துதவுமாறு மேற்படி பாடசாலை அதிபர் திருமதி ம. குமாரகுலசிங்கம் அறிவித்துள்ளார்.

க.பொ.த (சா/த) பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள மாணவர்களே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர். (உ-41)

## விபத்துடன் தொடர்புடைய

# லொறிச் சாரதி தடுத்துவைத்துவிசாரணை

[யாழ்ப்பாணம்]

சிறுப்பிட்டிசங்கத்திற்குசமீபமாக கடந்த 14ஆம் திகதி இடம்பெற்றலொறி சைக்கிள் விபத்தில் யுவதியொருவர் மரணமானதையடுத்து தலைமறைவாகிய லொறிச் சாரதி அச்சுவேலிப் பொலிஸாரால்கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்துச்சம்பவத்தையடுத்து அவ்விடத்தை விட்டு தப்பியோடிய லொறிச் சாரதி அச்சுவேலிப் பொலிஸாரால்தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவத்தில் யாழ். செயலக ஊழியர் எஸ் ஸ்ரீவள்ளிநாயகி என்பவர் மரணமானது தெரிந்ததே. [இ]

# பொலிஸாருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

ஜூலை 19 ஆம் திகதிஆர்ப்பாட்டக்காரர்களை குண்டாந்தடிகளால் தாக்கியும், துப்பாக்கியால் சுட்டும் அனர்த்தம் விளைவித்தவர்களான 25 பொலிஸார் மீதுத் தனித்தனியான அடிப்படை மனித உரிமை மீறல்வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

அடையாளம் காணப்பட்டுள்ள இந்த 25 பொலிஸார்களின தாக்குதல்களைக் கண்ட பலர் சாட்சியமளிக்க முன்வந்துள்ளதாக எதிர்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப்பொலிஸார் சொந்த சட்ட ஏற்பாடுகளைச் செய்யப்போகிறார்களா? அரசாங்கம் அவர்களுக்கான சட்டப் பாதுகாப்பை வழங்கப்போகின்றதா என்பதைப் பொறுத்து உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்கலாம் என்றும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# நிவாரணம் வழங்கும் முறையில் மாற்றம்

[யாழ்ப்பாணம்]

கடந்த காலங்களில் தரம் குறைந்த அரிசி வழங்கப்பட்டதைக் கண்டறிந்து இது தொடர்பாக திறைசேரியுடன் தொடர்புகொண்டு தரமான அரிசி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று கிராம உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் ஏற்பாட்டில் இடம்பெற்ற போது இதனை அமைச்சர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தரைவழி பாதைதிறக்கப் பட்டு சுமுகமான சூழல் ஏற்படும் வரை யாழ். குடாநாட்டு மக்களுக்குநிவாரணம் சீராக வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் இன்னும் ஒருமாத காலத்திற்குள் எமது அமைச்சின் கீழ் கொண்டுவரப்படவுள்ளதால். அதன்பின் நிவாரணம் வழங்கும் முறையில் பல மாற்றம் கொண்டுவரத் தீர்மானித்துள்ளேன் என்று குறிப்பிட்டார். (உ)

## வழியனுப்பு வைபவம்

[யாழ்ப்பாணம்]

சென் ஜோன்ஸ்படையணியினர் கொழும்பு செல்வதையிட்டு இவர்களுக்கு வாழ்த்துக்கூறிவழியனுப்பும நிகழ்ச்சி ஒன்று ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அமைச்சர் கே. என், டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு உரையாற்றுகையில் கடந்த காலங்களில் கொழும்பு சென்று தேசிய மட்டத்திலான போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிவாகை சூடிவந்தீர்கள் அவ்வாறே இம்முறையும் வெற்றிவாகைசூடி நம் மண்ணுக்கு பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன் என்றார். (உ)

# விமானப் பயணிகள் பற்றிய விபரங்களை அறியலாம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலால் வெளிநாட்டிலிருந்து வந்த விமானங்கள் வேறு வேறு விமான நிலையங்களில் தரையிறக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் சிட்னியில் இருந்து வந்த விமானம் சென்னைக்கும் லண்டனில் இருந்து வந்த விமானம் டுபாய்க்கும். ஜேர்மன் பேர்ஜின் ஆகிய நாடுகளில் இருந்து வந்த விமானம் சென்னைக்கும் திருப்பி அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அறியவிரும்பும் பொதுமக்கள் 01-73919 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஸ்ரீலங்கன் விமான சேவை கேட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் நடைபெற்ற விமான நிலையத்தில் பயணிகள் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் மக்கள் அவர்கள் தொடர்பாக வீணாக அஞ்சத்தேவையில்லை என்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது. (உ-7)

# யுரேனியம் கடத்த முயன்ற மூவர் பிரான்ஸில் கைது

(பரிஸ்)
அணு ஆயுதங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் யுரேனியம் மூலப்பொருளை கடத்த முயன்ற மூவரை பிரெஞ்சுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து சுத்திகரிக்கப்பட்ட 5 கிராம் யுரேனியம் கைப்பற்றப்பட்டுள்ளது. இது பெருமளவு யுரேனியத்தை விற்பதற்குரிய மாதிரியாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில ஒருவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர், ஏனைய இருவரும் கமருன் நாட்டைச் சேர்ந்தவர்கள்

இவர்களிடமிருந்து அணு ஆயுத தயாரிப்பு பற்றி ரஷ்ய மொழியில் எழுதப்பட்ட குறிப்புக்களும், மத்தியகிழக்கு நாடுகளுக்கான விமானக் கடவுச்சீட்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பிரான்சில் இவ்வாறான கடத்தல் யுரேனியம் பிடிபட்டது இதுவே முதல் தடவையாகும். (உ-8

# யுத்த நிறுத்த விஸ்தரிப்பின் எதிரொலி
# மணிப்பூர் சட்டமன்ற உறுப்பினர் வீடுகளின் முன்பாக ஆர்ப்பாட்டம்

## கலகக்காரர் கட்டடங்களை நாசமாக்கினர்

(மணிப்பூர்)
மணிப்பூர் மாநிலத்தில் நாகதீவிரவாதிகளுக்கு எதிரானசண்டை நிறுத்தத்தை நாகலாந்திற்குவெளியேநீடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ந்து கிளர்ச்சிகள் நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் ஆரம்பமான மேற்படி கிளர்ச்சி நேற்றைய தினமும்தொடர்ந்ததாகவும் மணிப்பூர்மாநிலத்தின் தலை நகர் இக்பாலில் கிளர்ச்சிக்காரர்களால் மேற்கொள்ளப்படும் நாசகார வேலைகளை அடுத்து அப்பகுதிக்கு பெருமளவுபொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

கிளர்ச்சிக்காரர்களின் மேற்படி ஆர்ப்பாட்டத்தினால் மத்திய அமைச்சர் சோபசிங் உட்பட வேறு பல சட்டமன்ற உறுப்பினர்களின் வீடுகள் இடித்து நொருக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் இக்பால் நகரத்தில் உள்ள கடைகள், அரச கட்டடங்கள் பேருந்துகள் என்பன தீவைத்துக் கொளுத்தப்பட்டதாகவும் பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மணிப்பூரில் நிலவி வரும் மேற்படி அசாதாரண நிலையைக் கட்டுப்படுத்த அப்பகுதியில் ஊரடங்குச்சட்டம் எந்நேரமும் பிறப்பிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. [உ-9]

அரசின் புறந்தள்ளும் போக்கே
# விமானத்தளம் மீதான தாக்குதலுக்கு காரணம்
## இராணுஆய்வாளர்கருத்து

(லண்டன்)
விடுதலைப் புலிகள் விடுத்த சமாதான சமிஞ்ஞைகளை அரசு புறந்தள்ளியதே கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின்மீது புலிகள் தாக்குதல் மேற்கொள்ளக் காரணமாக இருக்கலாம் என இராணுவ ஆய்வாளரும் தமிழ் நெற் இணையப் பத்திரிகையின் ஆசிரியருமான சிவராம் நேற்று முன்தினம் பி.பி.சி தமிழோசைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இராணுவ ரீதியிலானதாக்குதல்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதா இல்லையா என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு அரசின் கையிலேயே உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

# இசைவிழா நிகழ்ச்சிகளை வானொலியில் கேட்கலாம்

(சென்னை)
சென்னை வானொலிநிலையம் ஒரு மாத காலத்திற்கு இசைவிழா நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச்செய்ய இருக்கிறது.

இதன் மூலம் மறைந்த மற்றும் சமகால இசை விற்பன்னர்களின் கச்சேரிகளை அனைவரும் கேட்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. [து]

# 14 ஆசிரியர்கள் பலி

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலத்தில் பஸ்வண்டி ஒன்று தடம்புரண்டதில் 14 ஆசிரியர்கள் ஸ்தலத்திலே பலியாகியுள்ளனர் மேலும் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தில் குஷாத் மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக இவ்விபத்து நிகழ்ந்துள்ளது (உ-7)

# இந்தோவின் புதிய அதிபராக சுகர்ணோ புத்ரி தெரிவு
## குழப்பங்கள் தணிவு

(ஜகார்த்தா)
இந்தோனேசியாவின் ஜனாதிபதியாக மேகவதி சுகர்ணோ புத்ரி பதவியேற்றதைத் தொடர்ந்து அங்கு நிலவிய குழப்பநிலை தணிந்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் ஆற்றிய உரையில் ஜனாதிபதி வாசஸ் தலத்தை விட்டு முன்னாள் ஜனாதிபதி அப்துரஹ்மான் வாஹிட் வெளியேறியபின்னர் முக்கிய பல தகவல்களை வெளியிடவுள்ளதாகத் தெரிவித்தார். (உ-7)

# செய்திப்பரல்

★ மணிப்பூரில் பிரிவினைவாத கெரில்லாக்கள், 3 இந்தியபாரா இராணுவத்தினரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

★ நேபாளத்தில் மாவோ கிளர்ச்சிக்காரர்கள் 15 பொலிஸாரை கொன்றுள்ளனர்.

★ பலஸ்தீனருடனான யுத்த நிறுத்தத்தை கண்காணிப்புச் செய்வதற்கு அமெரிக்க சி. ஐ. ஏ குழுவை இஸ்ரேல் அனுமதிக்கவுள்ளது.

★ ஸ்ரீநகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு ஒன்றில் 5 பாராளுமன்றத்தினர் உட்பட 8 பேர் காயமுற்றுள்ளனர்.

★ அமெரிக்க ஜனாதிபதி புஷ் முதல் தடவையாக பாப்பரசரை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார். [உ-3]

# மண்டேலாவுக்கு புற்று நோய்
## உரிய சிகிச்சையளித்தால் உயிருக்கு பங்கமில்லை

(பிறிடோறியா)
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவிற்கு புற்றுநோய் ஏற்பட்டிருப்பதாக வைத்திய அறிக்கை தெரிவித்துள்ளது.

மண்டேலாவின் புறொஸ்டெட் சுரப்பியில புதிய வகை புற்றுநோய் கிருமி படர்ந்துள்ளதாகவும் எனினும் அவரின் ஆயுளுக்கு இந்தப் புற்றுநோயால எதுவித பாதிப்பும் ஏற்படாது எனவும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

83 வயதான மண்டேலாவுக்கு சத்திரசிகிச்சை செய்வது பயன் தராது என்ற காரணத்தினால் கதிர்வீச்சின் மூலம் சிகிச்சை அளிக்க ஏற்பாடாகியுள்ளது.

இந்நோய்பற்றி வைத்திய நிபுணர்கள் கருத்து வெளியிடுகையில், வயதான ஆண்களுக்கு இவ்வாறான புற்றுநோய் ஏற்படுவது வழக்கமானாலும் ஆரம்பத்திலேயே இதனைக் கண்டுபிடித்து நடவடிக்கை மேற்கொண்டால் உடலின் ஏனைய பாகங்களுக்கு இது பரவாமல் தடுக்க முடியும் என தெரிவித்தனர். (உ-7)

# இந்தோ. முன்னாள்ஜனாதிபதி வாசஸ்தலத்தை விட்டு வெளியேற மறுப்பு

(ஜகார்த்தா)
இந்தோனேஷிய முன்னாள அதிபர் அப்துல்ரஹ்மான்வாஹிட் பதவியிலிருந்து விலக்கப்பட்ட போதும் வாசஸ்தலத்தை விட்டுவெளியேறமறுத்துள்ளார்.

மேகவதி பதவியேற்றுள்ள போதும் நகர் அமைதியாக இருக்கிறது என்றும் வாஹிடின் இடமான ஜாவாத்தீவும் அமைதியாக இருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது. (து)

# உலக தரிசனம்

## அமெரிக்க படை வீரர் ஜப்பானில் கைது

(கொழும்பு)
ஜப்பானின் வடபகுதி நகரானமிசாவாவில்கார்ஒன்றை களவாடியதாக அமெரிக்கப் படைவீரர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை மிக அண்மையில் ஜப்பானியப் பெண் ஒருவர் அமெரிக்க படைவீரரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பாக அமெரிக்க படைவீரர் ஒருவர் மீது குற்றம்சாட்டப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ குளுகுளுப்பூட்டும் புது ஆடை

குளுகுளுப்பான காற்றை உடல் மீது வீசிக்கொண்டிருக்கும் புதுவகை ஆடை ஒன்றை ரஷ்ய விஞ்ஞானிகள தயாரித்துள்ளார்கள்.

வெக்கையான பகுதிகளில் வாழ்வோர் இதனை அணிந்து கொண்டால் ஆனந்தப்படுவார்களாம்.

வெப்பமான வெட்டவெளி சூழ்நிலைகள், தொழிற்சாலைகள் கொதிகலன் கூடங்களில் அனல் தகிக்கும் சமையல் அறைகளில் வேலை பார்ப்பவர்களிற்கு இவ்வாடை ஒரு வரப்பிரசாதம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அண்மையில் புதுடில்லியில் வெப்பத்தால் உருகியவர்கள் இவ்வாடையைக் கண்டால் சொர்க்கம் என்று சொல்வார்களோ?

### ★ பள்ளிப் பாடமான பொப்மியூசிக்

காதைக் கிழிக்கும் கடாபுடாச் சத்தத்தில் இதென்ன பாட்டு? இப்போதெல்லாம்பாட்டேகேட்கமுடிவதில்லை என்று எம் ஊர் பெரியவர்கள் அலுத்துக் கொள்ளும் பொப்மியூசிக் இங்கிலாந்துப் பள்ளிக்கூடங்களில் ஒரு பாடமாகவே ஆக்கப்பட்டுள்ளதாம்.

வழக்கமாகப் படித்துவரும் பாடங்களுடன் பொப்மியூசிக்கையும் மாணவர்கள் அங்கு எடுத்துக்கொள்ளலாமாம்.

-அவதானி-


# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

முகாமைத்துவ கற்கையியல் வணிக பீடப் பரீட்சைகள்

## கல்வியாண்டு-2000

முகாமைத்துவ கற்கையியல் வணிகபீடத்தின் பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் மாணவரிடமிருந்து 2001-08-08 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

நிர்வாகமாணி/ வணிக பரீட்சைகள்
(1) பகுதி II- 2000
(2) பகுதி III 2000
(3) முதலாம் ஆண்டுமீள் பரீட்சை- 2000 (பழைய பாடத் திட்டம்)
(4) பகுதி 1 மீள் பரீட்சை- 2000 (பழைய பாடத் திட்டம்)
(5) இரண்டாம் மொழி ஆங்கில விசேட பரீட்சைகள் (Level I, II, & III)

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூ. 50 வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை 2001. 07. 27 ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கையியல் வணிக பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்.
(C/- 2316)

உற்றநோய் நீங்கி உறாஅமை
முன்காக்கும்
பெற்றியார்ப்பேணிக்
கொளல்

குறள்

# வலம்புரி

## பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்!

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலையில் விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலை அடுத்து அன்று மாலையே வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள விடுதலைப்புலிகளின் நிலைகள்மீது விமானத் தாக்குதல் இடம் பெற்றதாக அரசு அறிவித்துள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விமானப் படைத்தளத்திலுள்ள யுத்தவிமானங்களை புலிகள் தாக்கியழித்த போது அதனைத் தடுக்க முடியாத விமானப் படையினர் வடக்குக் கிழக்கிலுள்ள புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாக அறிவித்திருப்பது, அறிவியலும்- தகவல்தொழிலநுட்பமும் வளர்ச்சியடைந்த 21ம் நூற்றாண்டில் இலங்கை அரசு மிகப் பெரும் பின்னடைவில் உள்ளதையே சுட்டி நிற்கிறது.

யுத்த விமானங்கள் தரித்து நிற்கும் இடத்தில் நடக்கும் தாக்குதலை முறியடிக்கமுடியாத விமானப் படையினர் வடக்கு-கிழக்கிலுள்ள புலிகளின் நிலைகளைத் தாக்கியுள்ளனரெனில் அது நிச்சயம் பொதுமக்களின் குடியிருப்புகள் மீது போடப்பட்ட குண்டுகளையே குறித்து நிற்கிறது.

கடந்த காலங்களில், யுத்த விமானங்களின் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் ஏராளம். மக்களின் குடியிருப்புக்களை நோக்கிநடத்திய விமானக் குண்டுத் தாக்குதலின் போது கொல்லப்பட்டவர்களின் இரத்த உறவுகளின் கண்கள் இன்னமும் ஈரமாகவேயுள்ளது. ஏழையின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்ற 'வள்ளுவ அறம் பொய்க்காது என்பதை, நேற்று முன்தினம் நடந்த கட்டுநாயக்கா விமானத்தளத் தாக்குதல் நிரூபித்துள்ளது.

பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்; என்ற பட்டினத்தடிகளின் பாடலுக்கு, அனுமன் தென்னிலங்கையை தீயிட்டுக் கொளுத்தியதை விளக்கமாகக்கொண்டாலும், தற்போது 'பின்னையிட்டதீ' என்பதற்கு, யாழ்ப்பாணத்தில் முன்னையிட்ட தீக்காக பிற்காலத்தில் தென்னிலங்கையில் தீ பற்றும் என்பதைக் குறித்து நிற்கிறதோ எனக் கருத வேண்டியுள்ளது. அதற்குச் சான்றாக, தற்போதைக்கு கொள்ளலாமா கட்டுநாயக்கா நிகழ்வுகளைக் கொள்ளலாம்.

# இனங்களிடையே புரிந்துணர்வு ஏற்படுத்திய கல்வியியற் கல்லூரிகளிற்கான செயலமர்வு

தேசிய ஒருமைப்பாட்டு செயற்திட்டப் பணியகத்தினால் 22-07-01- 26-07-01 வரை அட்டனில் செயலமர்வும் கருத்தரங்கும் நடைபெற்றது அதில் ஒன்பதுதேசியகல்வியியற்கல்லூரிகளில் இருந்து 36 மாணவர்களும், விரிவுரையாளர்களும் பங்குபற்றினர். தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் என பல இனத்தவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது இலங்கையிலுள்ள இனப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணம் என்ன என்பது பற்றிய கருத்துக்கள் ஆராயப்பட்டன.

### சிறந்த எதிர்காலம்

நாட்டின் எதிர்காலத்தை சிறந்த முறையில் ஆக்கும் பணியை ஆசிரியர்களே மேற்கொள்ள வேண்டும் அந்த வகையில்வாண்மைவிருத்தியை வளம்படுத்துவதில் ஆசிரியருக்கானமுன்சேவைபயிற்சியினை தேசிய கல்வியியற்கல்லூரிகள் வழங்கிவருகின்றன.

சமாதானம்என்ற எண்ணக் கருவினை அடைய உதவுவது கல்வியாகும். இது 7 அடிப்படைப் பண்புகளை கொண்டது.

1. மனவெழுச்சிகளை முகாமைத்துவம் செய்தல்
2. சகித்துக் கொள்ளல்
3. பிறர் உணர்வை தான் பெறல்
4. நன்றி தெரிவித்தல்
5. பாராட்டுதல்
6. வரவேற்றல்
7. திறந்த- புத்துணர்வான கலந்துரையாடல்களை மேற் கொள்ளல.

மேற்படி விடயங்களினால் அகச்சமாதான மானது உருவாக முடியும். ஏனையோரின் சிந்தனைஎதிர்பார்ப்புகள் என்பவற்றை விளங்கிக்கொள்ளும் திறனை விருத்தி செய்து கொள்ளலாம் என்பதையும அறியமுடிந்தது.

பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்த ஆசிரிய மாணவர்களுடன் உரையாடிய போதும், கருத்தரங்கை மேற்கொண்ட விரிவுரையாளர் மூலமாகவும் பெற்ற உண்மைகளை முன்வைக்கிறேன்.

### மூவினத்து மாணவர்கள்

இலங்கையில் சமாதானம் நிலவ வேண்டும் என்பதில் தமிழ் மாணவர்கள் போன்று சிங்கள முஸ்லிம் மாணவர்களும உறுதியாக உள்ளனர்.

நாட்டில முரண்பாடுமனித உரிமை மீறல் போன்றவை ஏற்பட்டதன் விளைவாகவே யுத்தம் ஆரம்பமானது யுத்தத்தின தாக்கம் தமிழ் மாணவர்களையே பெரிதும தாக்கியுள்ளது எனினும அதன் மூலம் பெற்ற அனுபவத்தை சிங்கள ஆசிரிய மாணவருடன் பகிரக் கூடியதாயிருந்தது.

சிங்கள மாணவர்களுடன் அட்டனில் மலையிலே நின்ற போது எதிர்பாராத விதமாக வெடிச் சத்தம் கேட்டது. உடனே திகைத்து விட்டனர். நாம் அசையவேயில்லை ஏன் பயமின்றி நிற்கின்றீர்கள்? என்று கேட்டனர் எமக்கு இவை பழக்கப் பட்டுவிட்டன. என்றோம.

### யுத்தத்திற்கான தீர்வு

இலங்கையில யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைநிலைநாட்ட இனப் பிரச்சினைக்கான அடிப்படைப்பிரச்சினைகளை தெரிய வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட போது அவர்கள தமக்கான தனிநாட்டை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமானது இவ்வாறு யுத்தத்திற்கான தீர்வை அணுகும் போது நாட்டை இரண்டாக பிரிக்கலாமா? இல்லையா? என்பது பற்றிய ஆய்வு நடைபெற்றது.

நோக்க வேண்டும் என்பதாகும்'' என்றார்.

### பெற்ற தகவல்கள் அனுபவங்கள்

அட்டனில் எம்மை அணுகிய ஆசிரிய மாணவர்கள் யாழ்ப்பாணம் என தெரிந்து இங்குள்ள நிலையைவிளங்கிக் கொண்டனர். யாழ்ப்பாணத் தமிழர் என்றதும் முதலில் தாம் எம்மைக் கண்டு பயந்ததாகக் கூறினர். பின்னர் உரையாடியதன் மூலம் பய உணர்வு நீங்கினர். இதற்கு காரணம் தமிழர்கள் பற்றிய தவறான அபிப்பிராயம்அவர்களிடம்இருந்தமையேயாகும். கல்வியற்கல்லூரி செயற்பாடு பற்றி கதைத்தவேளையில் ஓர் ஆசிரிய மாணவன் உங்கள் கல்லூரி எங்கே உள்ளது? கட்டடம எப்படி பெரியதா? எனக்கேட்டார். எனக்கு கோப்பாய் என்றே விடை கூற முடிந்தது. இதுவரை சொந்தக்கட்டடம் இல்லை என்றேன். எப்படி உங்களால் சமாளிக்க முடிகிறதா? என வினவினார். அதற்கான தெளிவான விளக்கமளித்தோம். இடப்பெயர்வு, யுத்தமஎன்ற வேளையிலும தற்துணிவும், நிர்வாகமுகாமையுள்ள பீடாதிபதி கலாநிதிதிருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் திறமையாலும் ஆற்றல்மிகு விரிவுரையாளர்களினாலும, புரிந்துணர்வுமிக்க மாணவர்களாலும் பிரச்சினையின்றி செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்றோம். 'கூழைக்குடித்தாலும் குடிசையில் வாழ்வோம்' என்ற பீடாதிபதியின் வாக்கு அனைவரது உள்ளத்திலும விதைக்கப்பட்டது. எனவே, வளங்கள் இல்லாதபோதும் மனம் உடையாதுஉள்ளோம்.

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் பகிடிவதைநடைபெறவில்லை. அதற்கு என்ன காரணம் என கேட்கப்பட்டது. அதற்கு நிர்வாகத்தினரின் வழிகாட்டலும் புரிந்துணர்வுமிக்க ஆசிரிய மாணவரது ஒத்துழைப்பும்தான்எனக் கூறினோம இதனை கலந்துரையாடலில பங்கு கொண்டவரும் வரவேற்றனர் இதன் மூலமாகயாழ் கல்வியியற்கல்லூரி தனது பெருமையை மேலும் ஒருபடி உயர்த்திக் கொண்டது.

### மேலும் செயலமர்வில்

மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகள் பற்றிய கருத்துக்களும் அலசப்பட்டன அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்கால வாழ்வு பற்றியும் சிந்தித்தனர். தமிழ்மொழி, சிங்கள மொழி என்பன சம அந்தஸ்து உடையவை என்று கூறப்பட்டது. மொழி என்பது 'மனித மனங்களைப் பிரதி பலிக்கும் கண்ணாடி' என அமெரிக்க நாட்ட றிஞர்றோம் செமஸ்சி கூறியுள்ளமைகுறிப்பிடத்தக்கது. மொழியானது சமுதாயத்தின் சிந்தனைகளையும், தூரதர் சனங்களையும், நம்பிக்கைகளையும், வணக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும், கலாசார செய்திகளையும் பிரதி பலிக்கின்றன; எனவே ஒரு மொழியைநசுக்கி இன்னொரு மொழி வளரக் கூடாது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. அத்துடன் ஓர் இனத்தின் அடையாளத்தை நிர்ணயிப்பதில் சமயமும் முக்கியமானது என்பதும் கவனிக்கத்தக்கது. அந்தவகையில் நாட்டில் உள்ள இனப் பிரச்சினை பற்றியும், கல்விச் செயற்பாடுகள் பற்றியும், உரிமைகள், முரண்பாடுகள், சிறுவர் பற்றிய செய்திகள், ஆய்வுகள் பற்றிய தகவல்களை நேரடி அனுபவம், பட்டறிவுடன் பெற்றுக்கொள்ள முடிந்தது. □

**நடராசா திருவாசகன்**
2 ஆம் வருடம் ஆரம்பப் பிரிவு
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

### பொதுவான அபிப்பிராயம்

விவாதத்தின் பின் அங்கு வெளியிடப்பட்ட கருத்துக்களில 1983 படுகொலை நினைவு படுத்தப்பட்டது. நாடு துண்டாடப்பட்டால் பொருளாதார பின்னடைவு ஏற்படாது என்று பேராதனைப்பல்கலைக்கழகப் பொருளியல் துறை விரிவுரையாளர் குறிப்பிட்டார்.

தமது வீட்டிற்கு அருகில் தமிழர் வீட்டில நாய் உள்ளது அது பக்கத்தில் உள்ள சிங்கள வீட்டு நாயுடன்விளையாடுவதுண்டு ஒரு நாள் நாய்கள் இரண்டும சிங்களவர் வீட்டில அடிபட்டுள்ள வேளையில தமிழர் வீட்டு நாய் காயங்களுடன் தமிழர் வீட்டுக்கு தப்பிச்சென்றது. இவ்வாறான கதையின்மூலம தமிழர் வீட்டு நாய் தனக்கான பாதுகாப்பான இடம் இருந்ததால் தப்பியது அவ்வாறே ஒவ்வொரு இனமும் உரிமையுடன் பாதுகாப்பாக வாழ்வதற்குரிய இடம் வேண்டும என்ற சித்தாந்தம பிறந்தது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜக்குயூஸ் டெரியடா என்பவர் ''சிறுபான்மையினரின் பிரச்சினைகளை பெரும்பான்மையினரின் கண்ணோட்டத்தில் நோக்காது, மாறாக சிறுபான்மையினரின் பிரச்சினைகளை சிறுபான்மையினரின் மனோபாவத்திலேயே

## விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி யாழ். சிறைச்சாலையில் அண்மைக் காலங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த அருமைத்துரை விமலதாஸ் என்பவர் நேற்று யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்தபோது சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில அவரை விடுதலை செய்வதாக நீதிவான் தெரிவித்தார். (உ-6)

## தினசரி தியானம்

### பேரியல்பு

பெம்மானே, உன்னைப் போற்றுதலும, எனது பேரியல்பைப் பெறுதலும ஒன்றேயாம.

தூய உள்ளம, நேரான எண்ணம் நல்வினை ஆகிய இவை யாவும் மனிதனது பேரியல்பைப் பெருக்குதற் சென்று அமைந்தவைகளாம். அதிமான ஆற்றலும பெருநன்மையும், தெவிட்டாத இன்பமும உண்டாவது மனபரிபாகத்தினின்றேயாம. பெருமுயற்சி, ஆழ்ந்த எண்ணம், தெய்வீகப பற்று ஆகிய இவைகளின மூலமாகவே மேலோர் எக்காலத்திலும் தங்களதுமேலான இயல்பை வளர்க்கலாயினர். சிற்றியல்புடைய மனிதன் மன பரிபாகத்தால் பேரியல்புடைய மனிதனாக மாறியமைகிறான்.

விறகில் தீயினன் பாலிற் படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே

-அப்பர்-

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## சாயி அருளமுதம்



பொருட்கள் அவ்வளவுமுக்கியத்துவம் வாய்ந்தவையன்று, ஆனால் அவற்றிலிருந்து எழுகின்ற உண்மை பெறுமதி வாய்ந்ததாகும். சடப்பொருளில் ஆத்மீகத்தையும், ஆபரணத்தில் தங்கத்தையும, ஒழுக்கம் நடைமுறை பேதங்களில் இறைவனையும் நீங்கள் மனதினால் கண்டு ஆத்மாவை அறிய முயல வேண்டும். பிறப்பிலும், இறப்பிலும் எல்லோரும் சமமானவர்களே, இடைப்பட்டகாலத்திலே தான் எல்லா வித்தியாசங்களும் எழுகின்றன. அரசனாயிருந்தாலும், ஆண்டியாயிருந்தாலும் வெற்றுடம்புடனே தானேபிறக்கின்றான். இருவரும் சமமாகவே ஓசையின்றித் தூங்குகின்றனர். தங்கள் புதிய முகவரியைக் கூடத் தெரிவிக்காமல் இருவரும் வெளியேறுகின்றனர். அப்படியெல்லாமிருக்கும் போது அவர்களுடைய உண்மை நிலை எப்படி வேறாக இருக்க முடியும்? இந்த விஷயத்தில் எதுவித சந்தேகத்துக்கும் இடமில்லை. எல்லோரும் அடிப்படையில் ஒன்றே.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# அரசும் புலிகளும் யுத்தத்தைக் கைவிட்டு சமாதான பேச்சை தொடர வேண்டும்

## அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆலோசனை

(வாசிங்டன்)

இலங்கையின் தற்போதைய நிலவரம் தமக்கு மிகுந்த மனவேதனையையும் கவலையையும் அளிப்பதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜஸ்ரோ கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் நிலவரம் குறித்து அமெரிக்க இராஜாங்க அமைச்சு நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டது.

அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு கவலை வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் யுத்தத்தைக் கைவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தொடரும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வரவேண்டுமென ஐஸ்ரோ வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை கொழும்பில் உள்ள அமெரிக்க உயர் ஸ்தானிகராலயம் பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்படலாம் அல்லது பொது மக்களுடனான தொடர்பை இடைநிறுத்திக் கொள்ளலாமென்று ஏஜென்சி செய்தியொன்று தகவல் வெளியிட்டுள்ளது [இ]

### யுத்த விமா

மச்சலினத்துக்குசுமார் 3500 கோடி ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில் கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்டதை அடுத்து சுமார் 3600 கோடி ரூபாவினை விமானப் படையினர் இழந்துள்ளனர்.

பாதுகாப்புச் செலவினத்திலும் பார்க்க விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்ட விமானப்படையினரது சொத்து மேலதிகமாக உள்ளது. இதனை ஈடு செய்வதற்கு. பாராளுமன்றத்தில் குறைநிரப்புப் பிரேரணை கொண்டு வருவதற்கு முடியாத அளவில் பாராளுமன்றம் செப்ரம்பர் 7ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது

இந்நிலையில் யுத்தச்செலவினத்தை ஈடு செய்யவும் புதிய யுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்யவும், நாட்டின் பொருளாதார நிலையைப் பாதுகாக்கவும் மக்கள் மீது வரியைச்சுமத்தும் பணத்தைத் தவிர அரசுக்கு வேறு வழி ஒன்றுமில்லை.

அரசாங்கம் பாதுகாப்பு வரியையும், பொருட்கள் சேவைகள் ஜி எஸ் ரி வரியையும் விதிப்பதன் மூலம் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைஉயர்வு தவிர்க்க முடியாததொன்றாகிவிடும் இதனால் அரசு மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிவரும் எனவும் இதனால் அரசுக்கு எதிர்காலம் பாதகமாகவே அமையுமெனவும் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இக்கட்டான நிதி நெருக்கடிக்குள் சிக்கி இருக்கும் அரசுக்கு இந்தியா பாகிஸ்தான் ரஷ்யா போன்ற நாடுகள் சகலவழிகளிலும் உதவிகளைவழங்கத்தயாராக இருப்பதாகவும் இராஜதந்திரகள் கருத்து வெளியிட்டுள்னர். (வ)ள

### போர்க்களமாக

தீவுக்கு திரும்பு வதற்குவந்திருந்த ஆசிரியர் ரபீக் கட்டுநாயக்க விமானத் தளத்தில் இடம் பெற்ற துணிகர குண்டுத் தாக்குதல் சம்மந்தமாக மேலதிக தகவல்களைத் தெரிவிக்கையிலே போர்க்களமாக மாறிய கட்டுநாயக்காவிமானத்தளத்தில் நாம் உயிருடன் இருந்ததையிட்டு பேரதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளோன் என்று தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் சத்தம்அதிகரிக்கநாம்விமான நிலையத்தை விட்டு வெளியேறுவதற்கு நிலத்தில்தவழ்ந்தும் ஊர்ந்தும் சென்றோம் நாம் பிரயணம்செய்யவிருந்த விமானமும் இதில் சேதமடைந்துள்ளது விமான நிலையத்தில் இருந்துபலஎண்ணெய்க் குதங்கள எரிந்து சாம்பலானது என்றும் ஆசிரியர் ரபீக் தெரிவித்துள்ளார். (வ)

### உல்லாசப்

தாக்குதல் சர்வதேச விமான நிலையத்தில்உள்ள இராணுவ விமானத்தளம் மீது இடம் பெற்றுள்ளதால், அங்கு பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லையென்றும தெரிவிக்கப்பட்டுளளது,

இதேவேளை அமெரிக்க இராஜாங்க அமைச்சு நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டது, அவ்வறிக்கையில்;

இலங்கையில் பாதுகாப்பு நிலவரம உறுதிப்படுத்தபபடும் வரை, அமெரிக்கப் பிரஜைகள இலங்கைக்கு செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கபபட்டுள்ளது.

உல்லாசப் பயணத்துறை மூலம் பெருமளவு வருமானத்தை பெறுறுவந்த அரசுககு மேற்படி நாடுகள் விடுத்த அறிக்கை பேரிடியாக அமைந்துள்ளது. (இ)

> **லாலா சோப்**
>
> **சண்சயின் சோப்**
>
> புதிய விலை
>
> [ரூப - 11]
>
> **லாலா**
>
> அச்சுவேலி
>
> [கி/2315]

> ## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
>
> ### அறிவித்தல்
>
> **பரீட்சைகள்**
>
> பின்வரும் பரீட்சைகள் கீழ் குறிப்பிட்ட திகதிகளில நடைபெறும்.
>
> 1) தெரிவுப்பரீட்சை - உடற்கல்வி டிப்ளோமா
> 28 - 07 - 2001 மு.ப .0.00
>
> 2) தெரிவுப்பரீட்சை - முதுகல்வியியல்மாணி
> 30 - 07 2001 மு. ப. 10 00
>
> மேற்குறித்த இரு தெரிவுப் பரீட்சைகளும யாழ்ப்பாணப் பலகலைக்கழகம் யாழ்ப்பாணத்திலும், வவுனியா வளாகத்திலும் நடைபெறும்.
>
> 3) உடற்கல்வி டிப்ளோமா (2ம் வருடம்)
> 06 08. 2001
>
> 4) உடற்கல்வி டிப்ளோமா (1ம் வருடம்)
> 13. 08. 2001
>
> 5) மீன்பிடியியல் டிப்ளோமா (2ம் அரையாண்டு,
> 30-07-2001
>
> 6) முதலாம் வருட முகாமைத்துவ வணிகபீட பரீட்சைகள்
> (2ம் அரையாண்டு)
> 06 08-2001
>
> 7) பகுதி I முகாமைத்துவ வணிகபீடப் பரீட்சைகள்
> (2ம அரையாண்டு)
> 2 . 08. 2001
>
> 8) பகுதி II முகாமைத்துவ கணனி செய்முறை
> 31. 07. 2001
> பகுதி I வணிகக் கணனி செய்முறை
> (2ம் அரையாண்டு)
> 04.08.2001
>
> 9) முதலாம் வருட கலைப்பீடப் பரீட்சைகள்
> (2ம அரையாண்டு)
> 13. 8.2001
>
> 10) பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம்/ பகுதிநேரம் II)
> 13.08.2001
>
> (ஆண்டுப் பரீட்சைகள்)
>
> ★ உடற்கல்வி டிப்ளோமா பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இணைப்பாளர் உடற்கல்வி அலகில் 2001 . 07 . 27 அன்று பெற்றுக் கொள்ளலாம்.
>
> பதிவாளர்
> 2001-07-25
>
> (இ-2317)

### சேமிப்புவங்கியில் உற்சவகால கருமபீடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தேசியசேமிப்புவங்கி உற்சவகால கருமபீடமொன்றை நல்லூர் இந்துவிடுதிக்கு அண்மையில் திறந்துள்ளது.

இக்கருமபீடத்தில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்க முடியுமென யாழ்தேசிய சேமிப்புவங்கியின் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ந)

### பருத்தித்துறை

சன் துறையிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறையில் தங்கியுள்ள நான்குபிள்ளைகளின் தந்தையான அந்தோணிப்பிள்ளை அருள் பொன்னான்டோ வயது30 என்பவரே காணாமல் போயுள்ளார்.

சந்திரப்பிள்ளைபதிரூபன் வயது28நவரத்தினம் யோகராசன்ஆகிய இருவருமே கரை சேர்ந்தவர்களாவர்.

காணாமல் போனவர் தொடர்பாக ஈ.பி டி பியினர் கடற்படையினருடன் தொடர்புகொண்டுள்ளனர்.

இதனையடுத்து இன்று எவரையும் மீன்பிடிக்கசெல்ல வேண்டாம்என கடற்படையினர் தடுத்துள்ளனர் (வ.52.23)

### 7 சோடி

இச்சபபாத்துக்கள் கண்டு பிடிககப்பட்ட இடமன குனறாஜ் பகுதியில இராணுவமும, பொலிசாருமஇணைந்து தேடுதல்நடததி வருகின்றனர். [வ]

### பிரபல...

தேவ்யய படுமோசமாக சுட்டுவிட்டு ஆட்டோ ஒன்றில் தப்பிச் சென்று விட்டனர் படுகாயத்துடன பூலான் தேவி ஆஸ்பததிரியில அனுமதிக்கப்பட்டபோது அவா மரணமாகி விட்டதாக டாக்டர்கள் தெரிவிததனர்.

பூலானதேவி சுட்டுக் கொல்லபபட்ட சமபவத்தையடுத்து மக்களவைக கூட்டம ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட பூலான்தேவி சமாஜவாதக் கட்சியின் உத்தரப் பிரதேச முஸ்லஸபூர் தொகுதியின் உறுபபினரா க1999தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர் என்பதும இங்கு குறிப்பிடத்தக்கது. (வ- 8)

> ### உடன் தகவல தரவும
>
> எனக்குச் சொந்தமான 91ஸ்ரீ 1844 இலக்கம் உடைய ஹொண்டா 90 ரக (நீல நிறம) மோட்டார் சைககிள நேற்று இரவு வேளை களவாடப்பட்டுளளது. இமமோட்டார் சைக்கிள பற்றி யாராவது அறிந்தால் தயவு செய்து பின்வரும் முகவரிகுத் தகவல் தரவும.
>
> அ. இரத்தினசேகர்
> சுதுமலை வடக்கு,
> மானிப்பாய்.
>
> T.P 2746
> 3578
> (கி2318)

> தங்க நகையுலகில் தமக்கென தனியிடம் பிடித்தவர்கள்
>
> # வினோ நகைப் பூங்கா
>
> **185, கஸ்தூரியார் வீதி ,யாழ்ப்பாணம். T. .P - Fax - 2824** (5123)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.